NGM COLLEGE
POLLACHI

# NGM TIMES

News Bulletin
ngmtimes@gmail.com

EXPANSION WITH EXCELLENCE

Volume:2 Issue: 25 Special issue January to May 2023

## அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் ஐயா அவர்களின் நூற்றாண்டு விழா - சிலைத் திறப்பு விழா

அருட்செல்வர் நா.மகாலிங்கம் ஐயா அவர்களின் திருவுருவச் சிலைத் திறப்பு விழா, முதன்முதலாக என்.ஜி.எம் கல்லூரியில் 04.03.2023 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக உச்ச நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு வி.ராமசுப்பிரமணியம் அவர்கள் கலந்து கொண்டு, அருட்செல்வர் நா.மகா லிங்கம் ஐயா அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார். திரு வுருவச் சிலை திறப்பிற்குப் பின்னர் அருட்ஜோதி அகவலில் இருந்த “வாம ஜோதி” பாடல் பாடப்பட்டது.

இச்சிலை திறப்புவிழாவிற்கு, கல்லூரித் தலைவர் டாக்டர். பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் தலைமை தாங்கினார். சக்தி குழுமங்களின் தலைவர் திரு எம்.மாணிக்கம், கல்லூரிச்செயலாளர் திரு.எம்.பாலசுப்பிரமணியம் மற்றும் பொருளாளர், திரு. எஸ். சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் ரெ.முத்துக்குமரன் வரவேற்புரை ஆற்றினார். அருட்செல்வரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கமான “அருட்செல்வர் எனும் மாமனிதர்” என்னும் நூல் வெளியிடப்பட்டது. கல்லூரித் தலைவர் தமது தலைமை உரையில், அருட்செல்வர் 92 ஆண்டுகள் வாழ்ந்தவர், அடிமைப்பட்ட இந்தியாவையும் சுதந்திர இந்தியாவையும் பார்த்தவர். தனக்கென வாழாமல் நாட்டிற்காகவும், சமுதாயத்திற்காகவும் வாழ்ந்தவர் என்றும், 35 கல்வி நிறுவனங்களைத் தொடங்கிய அவரது திருவுருவச் சிலை, நமது என்.ஜி.எம் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. அருட்செல்வர் எப்போதும் தன் மேடையில் வள்ளலார் மற்றும் காந்தியின் பாடல்கள் பாடப் படுவதை விரும்புவார். அவ்வண்ணமே இன்றும் வள்ளலார், காந்தியின் பாடல் இந்த மேடையில் பாடப்பட்டது மிகவும் பொருத்தமானது.




**Arutchelvar Dr. N. Mahalingam Ayya Statue**



**Supreme Court Justice Sri V. Ramasubramanian Unveiling the Statue of Arutchelvar**

அருட்செல்வரின் சமுதாயப்பணி இன்றியமையாதது ஆகும். அவர் போன்று சமுதாயப் பணிபுரிய வேண்டுமென்றால் குடும்பத்தின் ஒத்துழைப்பு இன்றி அது சாத்தியமாகாது. அருட்செல்வர் சமுதாயப் பணிபுரிய ஒத்துழைத்த அவரின் துணைவியார் திருமதி மாரியம்மாள் அவர்களின் ஒத்துழைப்பு குறிப்பிடத் தக்கது. அருட்செல்வர் என்னும் தனிமனிதராக அளப்பரிய சாதனைகளை கல்வி, தொழில், சமூகம், ஆன்மிகம் போன்றவற்றில் செய்துள்ளார். அருட்செல்வரின் பணிகளைத் தொடர அவரின் புதல்வர்கள் மூவர் இருக்கின்றனர். அருட்செல்வரின் பெருமை யைத் தமிழ்நாடே அறியும். சென்னை -யில் நடைப்பெற்ற அருட்செல்வர் விழாவில் பங்கேற்றுப் பேசிய முதலமைச்சர் பொள்ளாச்சியில் உள்ள புதியதிட்ட சாலைக்கு ‘அருட்செல்வர் நா.மகாலிங்கம் சாலை’ என்று பெயர் மாற்றம் செய்து அறிவித்தார். இந்நிகழ்வில் கொங்கு அறக்கட்டளையைச் சேர்ந்த 5 நபர்களுக்கும் அருட்செல்வருடன் நெருக்கமாக இருந்த 5 நபர்களுக்கும் சிறப்புச் செய்யப் பட்டன.

சிறப்பு விருந்தினர் தமது சிறப்புரையில் “பொள்ளாச்சியின் அடையாளம் அருட்செல்வர்” என்றும், தான் பிறந்தது தஞ்சை மண்ணாக இருந்தாலும் தன்னைக் கொண்டாடிக் கொண்டிருப்பது கோவை மண் தான் என்றும் கூறினார். பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே வள்ளலாரைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே அருட்செல்வரின் விருப்பமாகும். இராமலிங்கர் பணி மன்றத்தில் நடைபெற்ற விழாவில் மாணவனாக அருட்செல்வரிடம் பரிசு பெற்ற, தான் அருட்செல்வரின் திருவுருவச் சிலைத் திறப்பு விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வந்திருப்பது தனக்குப் பெருமை அளிப்பதாகக் கூறினார்.